# நிரபராதிகளின் காலம்

(நாடகம்)

ஸீக்ஃப்ரீட் லென்ஸ்

ஜெர்மன் மொழியிலிருந்து தமிழில்

ஜி. கிருஷ்ணமூர்த்தி

க்ரியா

## ஸீக்ஃப்ரீட் லென்ஸ்

ஸீக்ஃப்ரீட் லென்ஸ் 1926இல் கிழக்கு பிரஷ்ஷியாவில் உள்ள **லூயிக்** என்ற இடத்தில் பிறந்தார். பதின்மூன்று வயதில் ஹிட்லர் இளைஞர் அணியில் சேர அன்றைய அரசியல் சூழல் அவரைக் கட்டாயப்படுத்தியது. பதினேழாவது வயதில் பள்ளி இறுதிப் படிப்பை முடித்துக்கொண்ட பிறகு கடற்படையில் சேர்ந்தார். நான்கு மாதப் பயிற்சிக்குப் பிறகு அவர் வேலை செய்துவந்த கப்பல் உலகப் போரின்போது மூழ்கடிக்கப்பட்டது. உயிர் தப்பிய லென்ஸ் டென்மார்க் நாட்டில் கடற்படை வீரராக ஊழியம் செய்ய அனுப்பப்பட்டார். அங்கிருந்து தப்பி ஓடிய லென்ஸ் (ஹிட்லரின் ரகசிய போலீஸ் தொடர்ந்து வந்தபோதிலும்) பல தொல்லைகளுக்கு இடையே 1945இல் ஆங்கில ராணுவ முகாமில் கைதியாகச் சரணடைந்தார். ஆங்கில மொழி தெரிந்திருந்ததால் அவருக்கு மொழிபெயர்ப்பாளராக வேலை கொடுக்கப்பட்டது. அதே ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டு ஹாம்பூர்க் நகரத்திற்குச் சென்றார். ஆங்கில இலக்கியம், இலக்கிய ஆராய்ச்சி, தத்துவம் ஆகியவற்றைப் பாடங்களாகக் கொண்டு பல்கலைக்கழகத்தில் தன் மேல்படிப்பைத் துவங்கினார். கறுப்புச் சந்தையில் பொருள்களை விற்று அதன் மூலம் கிடைத்த வருமானத்திலும், ‘வெல்ட்’ என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து பெற்ற ஊதியத்திலும் அவர் தன் படிப்பைப் பல இடைஞ்சல்களுக்கு நடுவே தொடர்ந்தார்.

1951இலிருந்து சுதந்திர எழுத்தாளராகச் செயல்படத் துவங்கினார். 1965இலிருந்து 1973வரை வில்லி பிராண்டின் சோசலிச ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளராக அரசியலில் பங்குகொண்டார்.

லென்ஸ் பெற்றிருக்கும் இலக்கியப் பரிசுகள்: ரேனே-ஷிக்ஸால் பரிசு (1952), ஹாம்பூர்க் நகர லெஸ்ஸிங் பரிசு (1953), பிரேமன் நகர இலக்கியப் பரிசு (1961), கெர்-ஹார்ட்-ஹௌப்ட்மன் பரிசு (1961), கிழக்கு ஜெர்மன் இலக்கியப் பரிசு (1961), ஜியார்ஜ்-மெக்கென்ஸன் பரிசு (1961), நார்த்ரைன்-வெஸ்ட்பாலிய கலைப் பரிசு (1966), லெஸ்ஸிங்-ரிங் பரிசு (1970), கோஸ்லார் நகரக் கலாச்சாரப் பரிசு (1978), ஆன்த்ரேயாஸ்-குரூபியஸ் பரிசு (1979), தாமஸ் மன் பரிசு (1984).

1988 அக்டோபர் மாதத்தில் ஜெர்மன் புத்தக வெளியிடுவோர், விற்பனையாளர்கள் சங்கம் அவருக்கு 1988ஆம் ஆண்டுக்கான 'அமைதிக்கான பரிசை' (Peace Prize) அளித்தது. 2000ஆம் ஆண்டு 'கதே'யின் 250ஆவது ஆண்டு நிறைவில் லென்ஸுக்கு 'கதே' பரிசு அளிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு ஸீக்ஃப்ரீட் லென்ஸ் காலமானார்.

இந்திய மொழிகள் ஒன்றில் முதன்முறையாக மொழிபெயர்க்கப்பட்டு வெளிவரும் ஸீக்ஃப்ரீட் லென்ஸின் புத்தகம் என்ற பெருமை இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பாகிய 'நிரபராதிகளின் காலம்' நாடகத்திற்கு உண்டு.

லென்ஸ் சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், நாவல்கள் என்று இருபத்தைந்து புத்தங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். அவருடைய பிற முக்கியமான நாடகங்கள் 'முகம்' (1964), 'வீட்டுச் சோதனை' (1967), 'கண்கட்டு' (1970). ●

# மொழிபெயர்ப்பாளர்

**ஜி.** *கிருஷ்ணமூர்த்தி புவியியலைக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். ஜெர்மன் மொழி படித்து, மாக்ஸ் ம்யுல்லர் பவனில் ஜெர்மன் மொழிப் பேராசிரியராக நீண்ட காலம் பணியாற்றினார். 1960களின் பிற்பகுதியில் 'இலக்கியச் சங்கம்' நடத்திய ஜெர்மன் இலக் கியக் கூட்டங்களுக்காக, வோல்ஃப்கங் பார்ஷெட், ஹைன் ரீஷ் ப்யோல், ரில்கே போன்ற படைப்பாளிகளின் எழுத்து களைத் தமிழில் மொழிபெயர்த்தவர். க்ரியா வெளியிட்ட காஃப்காவின் 'விசாரணை' நாவல் மொழிபெயர்ப்புக்கு ஆலோசகராக இருந்தவர். கிருஷ்ணமூர்த்தி 2005ஆம் ஆண்டு காலமானார்.*

●

# முன்னுரை

ஸீக்ஃப்ரீட் லென்ஸின் 'நிரபராதிகளின் காலம்' என்ற ரேடியோ நாடகம் 1961இல் ஒலிபரப்பாகியது. இந்த நாட கத்தை ஒலிபரப்பாத ஜெர்மன் ரேடியோ நிலையங்களே இல்லை எனலாம். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, ஐரோப்பிய ரேடியோ நிலையங்கள் அனைத் திலும் ஒலித்தது இந்த நாடகம். பிறகு மேடை நாடகமாக வும் வெற்றிநடை போட்டது. 1961இல் வெளியான இந்த நாட கத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இன்று மீண்டும் வெளி யிடுவதற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ் வாசகர்கள் அக்காரணங்களை எளிதில் புரிந்துகொள்ள முடியும். ஒரு வித பயங்கரவாதத்தின் அடிப்படையில் எழும் சமூகம், வேறு வித பயங்கரவாதத்திற்கு அடிமையாகிவிடுகிறது. ஜனநாயகம், சமதர்மம், சமூக நீதி, சிறுபான்மையர், பெரும்பான்மையர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, மனிதாபிமானம் எல் லாமே கேலிக்கூத்தாகிவிடுகிற இந்த நிலையில், ஜாதி, மதம், இனம், கொள்கை, சீர்திருத்தம் என்பவற்றின் பெயரால் வெறி என்ற எரிமலை வெடித்துச் சாதாரணக் குடிமகனின் சிந்த னைத் திறனை அழித்துவிடுகிறது. அறிவுஜீவிகள் மௌன மாகின்றனர். அல்லது களையெடுக்கப்படுகின்றனர். பல ஹிட் லர்கள் உருவாகும் சூழல் பிறக்கும்; வளரும்; மக்களை

*அடிமையாக்கும். இந்தியாவின் ஒருசில பகுதிகளிலும், அண்டை நாடுகளிலும் இவ்வாறான பயங்கரவாதம் தலை விரித்து ஆடுகிறது.*

*ஸீக்ஃப்ரீட் லென்ஸ், ஜெர்மனியின் அரசியல், பொருளா தார, சமூக, கலாச்சார வளர்ச்சியைக் கூர்ந்துநோக்கி, அவற் றின் சில அம்சங்களை இலக்கியப் படைப்புகளின் வாயிலாக மக்கள்முன் வைப்பவர். நல்லது கெட்டதை மக்களுக்கு எடுத் துச்சொல்லும் கடமை எழுத்தாளருக்கு இன்றியமையாதது என்று கருதுபவர். அதற்காக ஒரு எழுத்தாளன் தன் நாட்டின் அரசியல் வளர்ச்சியில் நேரடியாகவும் பங்குகொள்ள வேண் டும் என்று எண்ணிச் செயல்படுபவர். கிழக்கு பிரஷ்ஷி யாவில் **1926**இல் பிறந்த ஸீக்ஃப்ரீட் லென்ஸ், தன் இள வயதிலேயே இரண்டாவது உலகப் போரின் இறுதிக்கட்டத் தில் ஜெர்மன் கடற்படையில் சேர வேண்டியிருந்தது. ஹிட்லரின் நாஜி ஜெர்மனியில் தனது இளமைப் பருவத்தைக் கழித்த அவர், ஹிட்லரின் கொள்கை வெறியால் நாடும் மக் களும் எவ்வாறு அழிவுப் பாதையில் அழைத்துச் செல்லப்பட் டனர் என்பதை நேரடியாகப் பார்த்து உணர்ந்தவர். அவ ருடைய முக்கிய இலக்கியப் படைப்புகள் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் ஒரு கேள்வி, மனிதன் எந்தச் சூழலில் குற்ற வாளி ஆகிறான் என்பதே. தனிமனிதன் குற்றம் அல்லது சமூகத்திற்கே பொதுவான பொதுக் குற்றம்* (collective guilt) *எவ்வாறு தோன்றிச் செயல்படுகிறது என்பதே அவர் படைப்பு களின் முக்கிய அம்சம். சர்வாதிகாரம், குறிப்பிட்ட மக்களை மற்றும் இனத்தவரை அடக்கி ஒழித்தல், தனிமனிதன் குற்ற வாளியாக மாறுதல் போன்ற பின்னணியில் அவர் மனிதனை இனம்கண்டுகொள்ள உதவுகிறார். ஜெர்மனியில் தான் பார்த்து உணர்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றித்தான் அவர் எழுதியிருக்கிறார் என்றாலும், பாத்திரப் படைப்பு, கதைக் கரு, அதை விரிவாக் கும் விதம் போன்ற உத்திகளின் மூலம் குறிப்பிட்ட நாட்டின்*

எல்லைகளை மீறி, எந்த நாட்டிலும் இவ்வாறு நடக்கக் கூடும் என்று அவர் நம்மை எச்சரிக்கிறார். இந்நாடகத்தில், நாடகம் நடக்கும் காலம், இடம் எது, எவ்விதமான சித்தாந்தம், எவ்விதமான சர்வாதிகார அரசியல் அமைப்புச் செயல்படு கின்றன போன்றவற்றை வெளிப்படையாக விவரிக்காததன் மூலம், இந்த நாடகம் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்று நம்மை உணரவைக்கிறார். எனினும், அவர் ஜெர்மன் நாட்டுக் குடிமகன்; நாஜி ஜெர்மனியில் நிகழ்ந்த கொடூரங்களை மன தில் வைத்துதான் எழுதுகிறார் என்பதால், நாஜி ஜெர்மனியைப் பற்றித் தெரிந்துகொள்வது வாசகர்களுக்குப் பயனளிக்கும்.

ஹிட்லர் எதையுமே மறைக்கவில்லை. ‘என் போராட்டம்’ என்ற தனது நூலில் அவன் எல்லாவற்றையும்—இனவெறி, மதவெறி, மக்களைச் சிந்திக்க விடாமல் சினிமா, நாடகம், இலக்கியம் வாயிலாக மூளைச்சலவை செய்வது, பொருளா தார, சமூக பலம் கொண்ட சிறுபான்மையினரை ஒழித்துக் கட்டுவது, முடிந்துபோன சரித்திரகாலச் சம்பவங்களுக்குப் பழி தீர்த்துக்கொள்வது—தெளிவாக விளக்கியிருக்கிறான்

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக்கட்டியதால் பெரும்பான்மையான ஜெர்மன் மக்கள் ஹிட்லரை ஆதரித் தனர். ஒருசிலரைத் தவிர, சாதாரண ஜெர்மன் குடிமக்கள் நாஜி சித்தாந்தம் அப்படியே நடைமுறையில் செயல்படுத்தப்படும் என்று நம்பவில்லை. வேலை வாய்ப்பும், உண்ண உணவும், இருக்க வீடும் எல்லோருக்கும் கிடைத்ததால் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஹிட்லரின் அரசை ஆதரித்தார்கள். ஹிட்லர், ஆயுதங்களின் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் உலகத்தை அடிமைப்படுத்த உலகப் போருக்குத் தயாராகிறான் என்பதை மக்கள் உணரவில்லை. அண்டை நாடுகளை ஆக்கிரமித்த போது அங்கு வாழ்ந்த ‘பச்சை ஜெர்மன்’ மக்களைத் தவிர, வேறு இனத்தவரை, மொழியினரைக் கொடூரமான வழியில் அடக்கி ஒடுக்கினான் ஹிட்லர் என்பது பொதுமக்களுக்குத்

தெரிந்தும் தெரியாமலும் இருந்த உண்மை. குறிப்பாக, யூத மதத்தினர் எவ்வாறு கொஞ்சம்கொஞ்சமாகக் கொலை செய்யப்பட்டனர் என்ற உண்மையும் இலை மறைவு, காய் மறைவாகத்தான் மக்களுக்குத் தெரிந்தது. சுமார் அறுபது லட்சம் யூதர்களை நாஜி ஜெர்மனி கொலை செய்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் நாஜி அரசாங்க அட்டூழியங்கள் ஒவ்வொன்றாக வெளிவந்தபோது ஜெர்மன் மக்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொண்ட கேள்வி: உலகப் புகழ்பெற்ற சிந்தனையாளர்கள், கவிஞர்கள், இலக்கியக் கர்த்தாக்கள், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள், தத்துவவாதிகள், இசைக் கலைஞர்கள் தோன்றிய ஜெர்மனி ஏன் ஒரு ஹிட்லரையும் உருவாக்கியது? யூதர்களைப் பூண்டோடு அழிக்க முனைந்து, அதில் பெருமளவிற்கு வெற்றியும் பெற்ற நாஜி கொடுங்கோலர்களுக்கு ஏன் ஜெர்மனி வழிவகுத்தது? உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் கொடுக்கும் அரசைப் போற்றிய மக்கள், அதனுடைய மிருகத்தனமான மற்ற கொள்கைகளையும் அன்று ஏன் ஏற்றுக்கொண்டார்கள்? ஜெர்மன் அறிவுஜீவிகளும் அன்றாட வாழ்க்கையை நினைத்துதான் செயலிழந்து நின்றார்களா? தாய் நாடு, இனம், மொழி என்பவற்றின் பெயரால் அரசு புரிந்த கொடுங்குற்றங்களில் தனிப் பிரஜை ஒருவனின் பங்கு என்ன? நாட்டைத் தழுவிய, சாமானிய மக்களையும் உள்ளடக்கிய 'பொதுக் குற்றங்களில்' (collective guilt) தனிமனிதன் கைவிட்ட தார்மீகப் பொறுப்பும் அடங்கியுள்ளதல்லவா?

உலகப் போருக்குப் பின் அழிவுற்ற ஜெர்மனியின் ஒரு பகுதியான மேற்கு ஜெர்மனி, ஜனநாயக நாடாக மீண்டும் பொருளாதார பலம் பெற்று எழுந்தபோது, மேற்கூறிய கேள்விகளுக்கு இலக்கிய ரீதியாகப் பதிலளித்தவர்களில் ஸீக்ஃப்ரீட் லென்ஸூம் ஒருவர். அவருடைய நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகள் எல்லாமே மேற்கூறிய பிரச்சினை

களைக் கருவாகக் கொண்ட படைப்புகள். பொருளாதார பலம் பெற்று ஜெர்மனி மீண்டும் பணக்கார நாடாகத் திகழத் தொடங்கியபோது, ஜெர்மன் மக்கள் தங்களுடைய அண்மைக் கால (நாஜி-கால) சரித்திரத்தைப் பற்றிப் பேசத் தயங்கினார்கள். அக்காலத்தில் நிகழ்ந்த குற்றங்கள் எல்லாம் மறந்துவிட வேண்டியவை என்றும் நம்பினார்கள். ஆனால், போர்க்காலக் குற்றங்களைப் பற்றிய வழக்குகள் நியூரன்பெர்க் போன்ற நகரங்களில் நடந்தபோது, நாஜி-ஜெர்மனியைப் பற்றிய முழு விவரங்களும் வெளியானபோது, இளைய தலைமுறையினர்—ஹிட்லர் ஆட்சியின்போதோ, அதற்குப் பிறகோ பிறந்தவர்கள்—எவ்வித மனக்கசப்புக்கும் ஆளாகாமல் போர்க்காலக் குற்றங்களைப் பற்றி விவாதித்தனர். அன்றைய எழுத்தாளர்களும் அதில் தங்கள் படைப்புகளின் மூலம் சிறந்த பங்கை ஆற்றினார்கள். நாஜி கட்சிக்கு மட்டுமல்லாமல், எல்லா ஜெர்மன் நாட்டுக் குடிமகனுக்கும்—நேரடியாக இல்லாவிடினும்—அன்று நடந்த குற்றங்களில் மறைமுகமான பங்கு உண்டு என்பதை இலக்கியக் கர்த்தாக்கள் ஒளிவுமறைவு இன்றி மக்கள்முன் வைத்தார்கள். அன்று புரிந்த பாவங்களுக்கு இன்றுவரை ஜெர்மனி பிராயச்சித்தம் செய்துவருகிறது.

O

ஸீக்ஃப்ரீட் லென்ஸின் படைப்புகள் எல்லாமே தனிமனிதனின் குற்றத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று ஆரம்பத்தில் கூறினேன். 'நிரபராதிகளின் காலம்' நாடகத்தில் அவர் கேட்கும் இரண்டு கேள்விகள்:

— 'பொதுக் குற்றம்' என்று ஒன்று உள்ளதா?

— ஒரு குற்றம் நடக்க வேண்டும் என்று ஒருவன் மனதால் விரும்பி, அவ்வாறான குற்றம் நிகழும்போது, அதில்

> நேரடியாக எந்தப் பங்கும் கொள்ளாத ஒருவன் குற்றவாளியா, இல்லையா?

எவ்வாறு சாமானியர்கள் சர்வாதிகார ஆட்சியை எதிர்கொள்கிறார்கள், அந்தச் சர்வாதிகார ஆட்சியின் குற்றங்களுக்கும், அவர்களுக்கும் எவ்விதமான தவிர்க்க முடியாத தொடர்புகள் ஏற்படுகின்றன, அவ்வாறான நிலையில் அவர்கள் எந்த அளவுக்கு அவர்களாகவே முன்வந்து சர்வாதிகாரத்துடன் ஒத்துழைக்கிறார்கள் போன்ற பிரச்சினைகள் லென்ஸின் நாடகத்தில் விவரிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன.

சர்வாதிகாரி ஒருவனின் உயிருக்கு உலைவைக்க முயலுகிறது ஒரு கோஷ்டி. சர்வாதிகாரியின் இரண்டு மெய்க்காப்பாளர்கள் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். சர்வாதிகாரி தப்பிவிடுகிறான். கொலை முயற்சியில் நேரடிப் பங்குகொண்ட ஸாஸோன் கைதுசெய்யப்படுகிறான். சர்வாதிகாரியின் காவல்துறையினர் எவ்வளவு கொடூரமாக அவனைச் சித்திரவதை செய்தபோதும், அவன் தன் கூட்டாளிகளின் பெயர்களைக் கூறவோ, தன் கொள்கைகளை விட்டுவிடவோ மறுக்கிறான். சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களின் பிரதிநிதிகளாகக் கருதக் கூடிய ஒன்பது நிரபராதிகளைப் பிணைக்கைதிகளாக்கி, அவர்களிடம் ஸாஸோனை ஒப்படைக்கிறான் அந்தச் சர்வாதிகாரி. தெரிந்துகொள்ள வேண்டிய விபரங்களை ஸாஸோனிடமிருந்து வரவழைக்க அவர்களுக்குக் கட்டளை இடப்படுகிறது. பிணைக்கைதிகள் எல்லோருமே எந்த விதமான சட்ட விரோதச் செயல்களுக்கும் ஆளாகாத நிரபராதிகள், அரசியல் சார்பற்ற குடிமக்கள். தங்களுக்கு நேர்ந்த இழிநிலையைப் பற்றியே வாய் ஓயாமல் நொந்துகொள்ளும் நிரபராதிகள், ஸாஸோன் மட்டுமே தங்களுடைய இந்த இழிநிலைக்குக் காரணம் என்று அவனிடம் மோதுகிறார்கள். முதலில் கெஞ்சுகிறார்கள். பிறகு அவன் உள்ளத்தைத் தொடவைக்கும் என்று நினைத்து அவனுடைய மனிதாபி

மானத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். சர்வாதிகாரியுடன் ஒத்துழைக்க ஸாஸோன் முன்வர வேண்டும் என்று வாதமிடுகிறார்கள். ஒன்பது நிரபராதிகளின் சுதந்திரம் ஒரு தனிமனிதனின் கொள்கையைவிடப் பெரிது என்று அறிவுபூர்வமாகத் தர்க்கம் செய்கிறார்கள். ஸாஸோன் எல்லாவற்றிற்கும் பதில் கூறி அவர்கள் வாயை அடைக்கிறான்.

> 'என்னிடம் என்னதான் எதிர்பார்க்கிறீர்கள்? மூச்சுவிடாமல் நீங்கள் எல்லோரும் எனக்கு ஒரு எண்ணிக்கை விகிதாச்சாரத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். நீங்கள் சொல்வது எல்லாம் நாங்கள் ஒன்பது பேர், நீ ஒருவன் மட்டும்தான் என்பதுதான். உலகத்தில் நம்மைத் தவிர வேறு மனிதர்களே இல்லை என்றால் நீங்கள் என் மனநிலையை மாற்றியிருக்க முடியும். அந்த நிலையில் நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கும் தெளிவாகியிருக்கும். ஆனால், வெளி உலகில் கோடிக்கணக்கான மக்கள். அவர்களுடைய துயரம் கலந்த பெருமூச்சை என்னால் இங்குகூடக் கேட்க முடிகிறது. உங்கள் நியாய வாதத்தை உங்கள் முன்னே இப்போது வைக்கிறேன். இம்மக்களின் துயரங்களை எதிர்த்துப் போரடும் என் நண்பர்களின் பெயர்களை இம்மக்களின் நன்மையைக் கருதி நீங்கள் ஏன் கேட்காமல் இருக்கக் கூடாது? சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் நலத்திற்காகத் தியாகம் புரிய வேண்டும் என்று நீங்கள் கருதுவது உண்மையென்றால், நீங்கள் ஏன் தியாகத்திற்குத் தயாராக இல்லை?'

நிரபராதிகளுக்கு ஸாஸோனின் வாதத்தில் உள்ள உண்மையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வாசகர்கள் ஸாஸோனின் இந்தக் கூற்றைத் தவறாகப் புரிந்துகொள்ள முடியும். ஸாஸோனின் வாயிலாக லென்ஸ் வாசகர்களுக்குக் கூற வரும் விஷயமே வேறு. மனைவி மக்களுக்காகவும், உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், தன் உயிரை எப்படியாவது